புகைப்பட பிரதியாக்கல்
o கொழும்பு நகரிலும்,
o யாழ். நகரில் எமது ஆய்வுகூடத்திலும்
விரைவாக பிரதி செய்து பெற்றுக்கொள்ள
கலக்சி
புகைப்பட சேவை

பக்கங்கள்: நான்கு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

குறைந்த விலையில் தரமான வர்ண புகைப்பட சுருள்களை கொள்வனவு செய்ய
கலக்சி புகைப்பட சேவை
337, 1ஆவது மாடி,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 சித்திரை 07 ஞாயிற்றுக்கிழமை (19-04-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 143

# வங்காலையில் நேற்று அதிரடித் தாக்குதல்! பத்துக்கும் அதிக படையினர் உயிரிழப்பு!!

யாழ்ப்பாணம், ஏப்ரல் 19

வங்காலையில் நேற்றுக் காலை விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதல் ஒன்றில் பத்துக்கும் மேற்பட்ட படையினர் உயிரிழந்தனர். பதினொரு நவீன ரகத் துப்பாக்கிகள் உட்பட பெருமளவு இராணுவத் தளபாடங்களைப் புலிகள் கைப்பற்றினர்.

தள்ளாடி இராணுவ முகாமில் இருந்து வீதித் தடைகளை அகற்றுவதற்காக வெளியேறி வந்த படையினர் மீதே புலிகள் இந்த அதிரடித் தாக்குதலை நடத்தினர்.

தள்ளாடி முகாமில் இருந்து 350 யார் தொலைவில் — வங்காலைச் சந்திக்கு அருகில் உள்ள பரந்த வெளிப் பிரதேசத்தில் — வைத்து தாக்குதல் நடத்தப்பட்டது.

இதனால் முன்னேறிய படையினர் இழப்புக்களுடன் பின்வாங்கி முகாமுக்கு ஓடினர்.

அதனையடுத்து தள்ளாடி இராணுவ முகாமிலிருந்து மூன்று கவச வாகனங்களுடன் ஓர் இராணுவ அணி—

[4 ஆம் பக்கம் பார்க்க]

## பெருமளவு ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன!

யாழ்ப்பாணம், ஏப். 19

வங்காலையில் நேற்றுக் காலை விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலின் போது படையினரிடமிருந்து புலிகளால் கைப்பற்றப்பட்ட இராணுவத் தளபாடங்களின் விவரம் வருமாறு :-

| | | |
|---|---|---|
| ★ மினி மினி எல். எம். ஜீ. | — | 01 |
| ★ எவ். என். ஸி. ரகத் துப்பாக்கி | — | 05 |
| ★ ரி - 56 ரகத் துப்பாக்கி | — | 03 |
| ★ ரி - 81 ரகத் துப்பாக்கி | — | 02 |
| ★ மினிமினி எல். எம். ஜி. தொடர் ரவைகள் | — | 30 |
| ★ ஏ. கே. மகஸீன்கள் | — | 13 |
| ★ ரி - 81 ரக மகஸீன்கள் | — | 06 |
| ★ எவ். என். ஸி. மகஸீன்கள் | — | 16 |
| ★ ஏ. கே. ரவைகள் | — | 900 |
| ★ 5 56 ரக ரவைகள் | — | 1,200 |
| ★ ஜே. ஆர் ரக கிரனேட்டுகள் | — | 17 |

இத்தாக்குதல் சம்பவத்தின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் கப்டன் காஸிம் அல்லது தர்மா [சபரிஜூட் ரட்ண பாலா - மன்னார்], லெப்டினன்ட் நரேன் [சிறுகுளம் - மன்னார்] ஆகியோர் வீரமரணமடைந்தனர். [உ-5]

# தெரிவுக்குழுவின் செய்தியோடு பிக்குமார் குழு யாழ் புறப்பாடு

## யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர விடுதலைப் புலிகளுடன் பேசுவராம்

கொழும்பு, ஏப்ரல் 19

பத்து பௌத்த குருமார்கள் அடங்கிய தூதுக்குழு ஒன்று தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக நேற்றுக் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்பட்டது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றை வகுப்பதற்கு நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் செய்தி ஒன்றையும் பௌத்த தூதுக் குழுவினர் விடுதலைப் புலிகளுக்கு எடுத்துச் செல்வதாக அறிவிக்கப்பட்டது.

இத்தூதுக்குழுவினர், வடக்கு - கிழக்கில் நடைபெறும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான வழிவகைகள் குறித்துப் பேச்சுவார்த்தை நடத்துவதற்குத் திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பௌத்த பிக்குகள் தல்லெண்ணத் தூதுக் குழுவுக்கு பலப்பிட்டிய வண சித்தார்த்த மகாநாயக்க தேரர் தலைமை வகித்துச் செல்கிறார்.

யாழ்ப்பாண விஜயத்தை ஏற்பாடு செய்த வண. மாதம்பகம அஸ்ஸாஜி தேரோவு தூதுக்குழுவில் அங்கம் வகிக்கிறார். 1986 டிசம்பர்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## தவறான கருத்தை நீக்குவதே எமது நோக்கம்

### வண. அஸ்ஸாஜி தேரர் பேட்டி

லண்டன், ஏப். 19

இலங்கையின் பௌத்த பிக்குகள் தீவிரவாதிகள், இனவெறியர்கள், சிறுபான்மைத் தமிழ் மக்கள் மீது ஆதிக்கம் செலுத்த முனைபவர்கள் என்று பரவலாக நிலவிவரும் தவறான கருத்தை நீக்கவே நாம் யாழ்ப்பாணம் செல்கிறோம்.

யாழ். விஜயம் மேற்கொண்டுள்ள பிக்குகள் குழுவில் அங்கம் வகிக்கும் வண. மாதம்பகம அஸ்ஸாஜி தேரர் பி. பி. ஸிக்கு அளித்த பேட்டியின் போது இவ்வாறு தெரிவித்தார்.

சிங்கள — தமிழ் மக்களிடையே பரஸ்பரம் நம்பிக்கை, சமாதானம், நட்புறவு ஆகியவற்றை கட்டியெழுப்பும் மகத்தான பணிக்கு அடிக்கல் நாட்டுவதற்காகவே தமது குழுவினர் யாழ். விஜயம் மேற்கொள்ள முடிவு செய்ததாகவும் அவர் தெரிவித்தார்,

போருக்கான தீர்வு எதனையும் நான் எடுத்துச் செல்லவில்லை.

ஆனால் போரை நிறுத்த தமது தீர்வு என்ன என்பதை விடுதலைப் புலிகள் எம்மிடம் தெரிவிக்கவேண்டும் என்று நான் விரும்புகிறேன் எனவும் — அவர் கூறியுள்ளார். (அ-5)

## யுத்தநிறுத்தம், பேச்சுக்கு யாழ் ஆயர் வேண்டுகோள்

கொழும்பு, ஏப். 19

★ வடக்கு, கிழக்கில் கண்காணிப்புடனான போர் நிறுத்தம் ஒன்று உடனடியாக அறிவிக்கப்பட வேண்டும்.

★ அதனைத் தொடர்ந்து இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான பேச்சுக்களை மீளவும் ஆரம்பிக்க வேண்டும்;

யாழ். ஆயராக இருந்து ஓய்வு பெற்றுச் செல்லும் வணக்கத்துக்குரிய பி. தியோகுப்பிள்ளை ஆண்டகை இவ்வாறு வேண்டுகோள் விடுத்தார்.

கொழும்பிலிருந்து வந்த சர்வதேச ஏஜென்ஸிச் செய்தியாளர் ஒருவருக்கு பேட்டியளித்தபோது அவர் இவ்வாறு குறிப்பிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. [உ-த]

## பிக்குகள் யாழ் விஜயம்: தெற்கில் கருத்து வேறுபாடு

லண்டன், ஏப். 19

பௌத்த மத குழுவினரின் யாழ்ப்பாண விஜயம் குறித்து கொழும்பிலும், தென்பகுதிகளிலும் கருத்து வேறுபாடுகள் எழுந்திருப்பதாக பி. பி. ஸி தெரிவித்தது.

இந்த விஜயத்தையும் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படுவதையும் இலங்கை அரசும் எதிர்க்கட்சிகளும் ஆதரித்துள்ளன.

ஆனால் பௌத்த பிக்குகளில் ஒரு சாராரும் சிங்களப் பௌத்த மதத் தலைவர்களில் ஒரு சிலர் — மற்றும் அரசினை ஆதரிக்கும் தமிழ் அரசியல் குழுக்களைச் சேர்ந்தோர் இவ்விஜயத்தினை எதிர்க்கிறார்கள். — என்று பி. பி. ஸி மேலும் தெரிவித்தது. [உ-5]

## அன்னை பூபதி நினைவாக இன்று நினைவுக் கூட்டங்கள்

யாழ்ப்பாணம், ஏப். 19

அன்னை பூபதியின் நான்காம் ஆண்டு நினைவுதினத்தை ஒட்டி இன்று வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் ஆகிய பிரிவுகளில் அடையாள உண்ணாவிரதமும் நினைவுக் கூட்டங்களும் நடைபெறவிருக்கின்றன.

விடுதலைப் புலிகளின் தென்மராட்சிப் பிரிவு ஏற்பாடு செய்துள்ள நிகழ்ச்சிகள் கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்திலும், மட்டக்களப்பு — அம்பாறைத் தொடர்பகம் ஏற்பாடு செய்துள்ள நிகழ்ச்சிகள் யாழ். இந்துக்கல்லூரி மைதானத்திலும், வடமராட்சிப் பிரிவு கடற்புலிகள் ஏற்பாடு செய்துள்ள நிகழ்ச்சிகள் வல்வெட்டித்துறை அம்மன் கோவிலடியிலும் நடைபெறும்

காலை 8 மணிக்கு தேசியக் கொடி ஏற்றுதலுடன் ஆரம்பமாகும் உண்ணா நோன்பு நிகழ்ச்சி மாலை 4 மணி வரை நடைபெறும். இரவு 7 மணிக்கு நினைவுக்கூட்டங்கள் ஆரம்பமாகும். அவற்றைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

நினைவுக் கூட்டங்களில் விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்கள் பலர் உரையாற்றுவர். [உ-15]

## தமிழீழம் மீது ஆக்கிரமிப்பு நடந்தால் சமாதானக் கதவு மூடப்படும் அரசுக்கு பிரபா எச்சரிக்கை

### அன்னை பூபதிக்கு அஞ்சலி தெரிவித்து அறிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 19

''ஒரு புறம் யுத்தத்தை தீவிரப்படுத்திக் கொண்டு, மறுபுறம் சமாதானப் பேச்சுக்களை நடத்தி, புலிகள் மீது நெருக்குதல் போட்டு ஒரு தீர்வைத் திணித்து விடலாம் என சிங்கள அரசு எண்ணுகிறது. போரும் பேச்சும் என்ற இந்த இரட்டைவேட அணுகுமுறையை எமது விடுதலை இயக்கம் ஒருபொழுதும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. தமிழீழ மண்மீது பெரும் ஆக்கிரமிப்பு நடத்தப்பட்டு, தமிழ் மக்கள் பெருந்தொகையில் கொன்று குவிக்கப்பட்டால் நாம் திறந்து வைத்திருக்கும் சமாதானக் கதவு மூடப்பட்டு விடும் என்பதை தெட்டத் தெளிவாக எடுத்துக் கூற விரும்புகிறேன்.''

— தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் திரு வே. பிரபாகரன் இவ்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## பிக்குகள் யாழ் விஜயம்

## காரிருளில் வந்து கலக்கிய பொம்மர்கள்!

யாழ்ப்பாணம், ஏப். 19

நேற்று இரவு சுமார் ஏழு மணியளவிலும் அதன் பின்னர் இரவு 7-30 மணியளவிலும் வந்த இரு பொம்மர்கள் நகரையும் அதனை அண்டிய பகுதிகளையும் சேர்ந்த மக்களைக் கிலி கொள்ளச் செய்தன.

இருளோடு இருளாக விரைந்து வந்த பொம்மர்கள் பலவர்களின் மேலாக உறுமிய வண்ணம் தாழப்பறந்து வட்டமிட்டன. ஒரு பொம்மர் வெளிச்சம்போட்டுப் பறந்தது. அடுத்தது வெளிச்சமின்றி வட்டமிட்டது.

பொம்மர்களின் இரைச்சல் கேட்டு வீதிகளில் சென்று கொண்டிருந்தவர்கள் கலக்கமடைந்து விழுந்தடித்துக் கொண்டு பாதுகாப்பான இடங்களுக்கு ஓடினர்.

யாழ். நகரம், கோண்டாவில், மானிப்பாய், ஆனைக்கோட்டை, நல்லூர், கோப்பாய் பக்கங்களில் ''பொம்மர்கள்'' தாழப் பறந்து மக்

[4 ஆம் பக்கம் பார்க்க]

### 3 மீனவரைக் காணவில்லை

குருநகர், ஏப். 19

கடந்த 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை குருநகரில் இருந்து மண்டைதீவுக்கு அப்பால் மீன் பிடிக்கச்சென்ற மீனவர்கள் மூவர் நேற்றுவரை திரும்பவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது

அரியராசா நிக்ஸன் (வயது 25), ராசலிங்கம் டோணால்சுரேஷ்குமார் [ராஜு - வயது 26] மனவல்தாசன் எஸ்டீரியல் (வயது 24) ஆகியோரே காணாமல் போனவர்களாவர். (உ-31)

## மதுரையில் குண்டு வெடிப்பு!

சென்னை, ஏப். 19

''தினமலர்'' நாளிதழின் மதுரைப் பதிப்பு அலுவலகத்தின் முன்னால் நேற்று குண்டு ஒன்று வெடித்தது. இதனால் கூட்டத்தின் அலுவலக ஜன்னல்கள் சிதறின. உயிரிழப்புகளோ வேறு சேதங்களோ ஏற்படவில்லை.

பிரிவினை அமைப்பு ஒன்று எழுதியதாகக் கூறப்படும் அச்சுறுத்தல் குறிப்பு ஒன்று குண்டு வெடித்த இடத்தில் காணப்பட்டதாக பொலீஸார் தெரிவித்தனர். [உ-10]

## புலிகளைத் தடை செய்வதா? விரைவில் ஆக்கபூர்வ முடிவு

### பிரதமர் ராவ் சென்னையில் தகவல்

சென்னை, ஏப். 19

இந்தியாவில் விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடை செய்வதா என்பது குறித்து விரைவில் ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்படும்.

— இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் இவ்வாறு கூறினார்.

நேற்று சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் வைத்து செய்தியாளர்களுக்கு அவர் பேட்டியளித்தார்.

''விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடைசெய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா?'' — என்று செய்தியாளர் ஒருவர் கேட்டபோதே பிரதமர் ராவ் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

''இரண்டு தீவிரவாதிகளை ஒப்படைக்கும்படி லிபியாவை உலக நாடுகள் கட்டாயப்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## தமிழர் போராட்டத்தின் நியாயத்தை உலகிற்கு உணர்த்தியவர் அன்னை

### 4ஆம் ஆண்டு நினைவை ஒட்டி மகளிர் முன்னணி அறிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 19

அன்னை பூபதி தமிழர்களின் போராட்டத்தின் நியாயத்தை உலகிற்கு உணர்த்தியவர். அவர் தமிழீழப் பெண்களுக்கு மட்டுமன்றி உலகப் பெண் இனத்திற்கே பெருமை சேர்த்தவர். அவர் தமிழீழப் பெண்ணினத்தின் எழுச்சி வடிவம்.

—இவ்வாறு அன்னை பூபதியின் நான்காம் ஆண்டு நினைவு நாளையொட்டி விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியினர் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டமானது மீண்டுமொரு வியக்கத்தக்க தியாகத்தினை உள்வாங்கிக் கொண்டது. எமது போராட்டம் நீண்ட பெரும் தியாகங்களையும் அர்ப்பணிப்புகளையும் தன்னகத்தே கொண்டது. இந்த அர்ப்பணிப்புகள் தியாகங்களுள் அன்னை பூபதி அவர்களின் தியாகம் வித்தியாசமானது. போற்றுதற்குரியது;

ஒரு வல்லரசை எதிர்த்து தாயாக, ஒரு சாதா

[4 ஆம் பக்கம் பார்க்க]

**அன்னை பூபதி**
நினைவு பொது அறிவுப் போட்டியில் பரிசு பெறுவோர் விபரம்
3 ஆம் பக்கத்தில்

## மட்டக்களப்பு பகுதியிலும் மின் விநியோகம் பாதிப்பு

கொழும்பு, ஏப். 19

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள — இலங்கை மின்சார சபைக்குச் சொந்தமான — மின்மாற்றிகள் சேதமாக்கப்பட்டுள்ளன.

இதன் காரணமாக அம்மாவட்டத்திலுள்ள ஒன்பது நகரங்களுக்கு மின் விநியோகம் நேற்று முன்தினம் இரவு முதல் தடைப்பட்டுள்ளதாக இலங்கை வானொலி அறிவித்துள்ளது.

ஒந்தாச்சிமடம் களுவாஞ்சிக்குடி, தேற்றாத்தீவு, புதுக்குடியிருப்பு, முனைத்தீவு, கோயில்போரதீவு, களுதாவளை, கிரான்குளம், தாழங்குடா ஆகிய இடங்களிலுள்ள மின்மாற்றிகளே சேதமாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. [உ-10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

அல்சேஷன் பெண் நாய் [இரண்டு வருடங்கள்] விற்பனைக்குண்டு. தொடர்பு: பொ. தில்லைராசா இல. 55, 3 ஆம் கட்டை, பருத்தித்துறை வீதி, கல்வியன்காடு, யாழ்ப்பாணம். [20614]

அல்ஷேசன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. ச. தர்மகுலசிங்கம், கலா சாலை வீதி, திருநெல்வேலி. [20478]

இறக்குமதி செய்யப்பட்ட ஊத்தைச் சோடா (Washing Soda) விற்பனைக்குண்டு. மில்க்வைற், யாழ்ப்பாணம். [சி-1931]

### திருமண சேவை

உங்கள் தகுதிக்கு ஏற்ப மணமக்களைத் தேர்ந்து எடுத்துக் கொள்ளலாம். தொடர்பு: பொ. மோகன், ஸ்ரீராம் திருமண சேவை, புலோலி மேற்கு - மாயக்கை, பருத்தித்துறை. [20604]

உங்கள் விவாகப் பொருத்தங்களுக்கு பகல் 12-30—4-00 மணி தவிர்ந்த நேரங்களில் எல்லா நாட்களிலும் சந்திக்கலாம். Nallur Marriage Bureau, 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். [20630]

### புலமைப்பரிசில் பரீட்சை

ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான விசேட வினாத்தாள்கள் மலிவாகப் பெற்றுக்கொள்ளலாம். விடை அளித்துத் தந்தால் இலவசமாகத் திருத்திக்கொடுக்கப்படும். Bond Institutes 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [சி/1888]

### A/L 92 வினாத்தாள்

A/L 92 பரீட்சைக்குத் தயாராகும் விஞ்ஞான மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் பெற்றுக்கொள்ளலாம். பரீட்சைப் பகுதி, Bond Institutes 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [4650]

### தவறிவிட்டது

15-4-92 புதன்கிழமை அரியாலைக்கும், யாழ். பஸ் நிலையத்திற்கும் இடையில் பிரதான வீதியில் இரண்டு அப்பியாசக் கொப்பிகளுடன் முக்கிய அரச பத்திரங்கள் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவும். அ. அருள்ஞானசீலன், 290, 9 ஆம் குறுக்கு மணிப்புரி, கொழும்புத்துறை. [4670]

### மணமகள் தேவை

அமெரிக்காவிலுள்ள 29 வயது, யாழ். இந்து பொறியியலாளருக்கு அங்கு தொழில் புரியக் கூடிய (Professionaly Qualified) அழகிய வெளிநாட்டு, உள்நாட்டு யாழ். இந்து மணப்பெண் தேவை. இல: 399, உதயன் மேற்பார்த்து. செ. நாகேசன், 25/7, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். [20611]

### மணமக்கள் தேவை

மணமகன் வயது 31, 32, 27 வெளிநாடு, தனியார் நிறுவனம் வயது 45 கிறிஸ்தவம் மணமகள் வயது 33 B Sc ஆசிரியை, 35 வயது சைவ போசனம் தொடர்பு நேரில், தபாலில்- குணசேகரம், 7, கல்லூரி வீதி, கொக்குவில். [20625]

### இலக்சுமி திருமண சேவை

26 வயது, புரட்டாதி 1ஆம் பாதம், G C. E. A/L படித்த மணமகளுக்கு பட்டதாரி ஆசிரியர், உத்தியோகஸ்தர், அல்லது வெளிநாட்டில் தொழில் பார்க்கும் மணமகன் தேவை. தொடர்பு: செ. விசயரத்தினம், நவாலி கிழக்கு, மானிப்பாய். [20624]

### பழைய புத்தகங்கள்

பாவித்த புத்தகங்கள் நியாய விலையில் வாங்க, விற்க நகரில் புதிதாக, யாழ். பழைய புத்தகக்கடை, 32, அருச்சுனா (ஸ்ரான்லி) வீதி, யாழ்ப்பாணம். [4633]

### கல்வி

G.C.E. (O/L) இல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் இதுவரை சித்தி அடையாதவர்களுக்கும், ஆரம்ப அறிவின்றிக் குறைந்த புள்ளிகளைப் பெற்றவர்களுக்கும் 25 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில் விசேட சித்திக்குக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, வோகேந்திரா வீதி, சுண்டிக்குளி [20632]

Spoken English with Grammar உட்பட புலமைப் பரிசில் வகுப்பிலிருந்து A/L வரை சகல பாடங்களும் அதி உயர் விசேட தரத்திற்குக் கற்பிக்கப்படும். க. ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, வோகேந்திரா வீதி, சுண்டிக்குளி. [20633]

---

★ பேரடெனியா ★

இன்ஸ்ரிரியூட், கொக்குவில்.

**A/L கலை, வர்த்தகம்**

**94, 93 புதியபிரிவுகள்**

**ஆரம்பம்: 19-04 92**

நேரம்: காலை 6 மணி

- ★ வர்த்தகமும் நிதியும்: திரு தேவா
- ★ கணக்கியல்: திரு. யோகராஜா
- ★ பொருளியல்: பிரபல ஆசிரியர்
- ★ இந்துநாகரிகம்
- ★ தமிழ்
  திரு. பாலா
- ★ அளவையியல்: திரு. சயந்தன்
- ★ வரலாறு: செல்வி நாகராணி
- ★ அரசியல்: திரு. அருந்தவராஜா

[20619]

---

★ O/L ★

க. பொ. த. சாதாரணதரம்

**பகல் முழுநேர வகுப்பு**

**யூனிவேர்சல்**

கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

[சி-1889]

---

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம்: 05 — 10 — 1984

மறைவு: 06 — 03 — 1992

**சந்திரகுமார் கபில்ராஜ் (கபில்)**

திதி: 19 — 04 — 1992

அணைந்ததோர் அன்புத் தீபம்!
என்றும் அணையாதது எங்கள் பாசதீபம்!
மறைந்தது எங்கள் மணிவிளக்கு - என்றும்
மங்காத எங்கள் குல விளக்கு.

பிரிவினால் வாடும்:
குடும்பத்தினர்.

26, சுப்பிரமணியம் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம். [20627]

---

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**செல்லத்துரை வரதலிங்கம்**

[இளைப்பாறிய அதிபர்- யாழ் / வேலணை சைவப் பிரகாச வித்தியாலயம், முன்னாள் யாழ். மாவட்ட சாரண ஆணையாளர்; தீவுப்பகுதி செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி: தீவுப்பகுதி கால்நடை வளர்ப்போர் சங்கச் செயலாளர்]

மலர்வு: 25—09—1929

உதிர்வு: 12—05—1990

திதி: 19—04—1992

எங்கள் குடும்பத் தலைவர் எதிர்பாராத வேளையில் பிரிந்து ஈராண்டு சென்றாலும் உங்கள் நினைவே எங்களை வழிநடத்திக் கொண்டிருக்கும் என்ற நம்பிக்கையுடன், ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்;

உங்கள் குடும்பத்தினர்.

புங்குடுதீவு,
வேலணை. [20621]

---

## 30 ஆவது பிறந்த தினத்தின் போது
## 9 ஆம் மாத வீர அஞ்சலி



**லெப். கேணல் சரா**

**சின்னத்துரை ஜீவராஜா (சிவம்)**

கல்வியன்காட்டில் மழலையாய்: 19 — 04 — 1962

ஆனையிறவினில் மாவீரனாய்: 27 — 07 — 1991

களம் பல கண்ட வேங்கை
சின்னத்துரை ஜீவராஜா
சிவம் என்று அழைப்போம் நாங்கள்
சரா அவன் இயக்க நாமம்
தமிழின விடுதலைக்காய்
தம்முயிர் பணயம் வைக்கும்
மாவீரரில் ஒருவனாக
மாற்றானை ஆனையிறவில்
கதி கலங்க வைத்துக்
களப்பலி ஆகிவிட்டான்
தமிழீழம் தோன்றும் போது
தரணியில் பிறப்பான் மீண்டும்.

உங்கள் பிரிவால் வாடும்:
சித்தப்பா, அன்ரி, தம்பிமார், தங்கைமார்.

உடையார் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு. [20634]

---

வெல்லுங்கள்!
தங்கப் பதக்கங்கள்!!
பரிசில்கள்!!!

**உதயன் வெளியீட்டகத்தினர்**
**யாழ். பல்கலைக்கழகத்துடன்**
**இணைந்து நடத்தும்**

## ★ மாபெரும் கட்டுரைப் போட்டி ★

மாணவர்களே! தமிழ் ஆர்வலர்களே!

உங்கள் பரந்த அறிவைப் பெருக்கவும்
உங்கள் திறமை வெளிப்படவும்
இதோ ஓர் அரிய சந்தர்ப்பம்!

### போட்டி அமைப்பு:

★ பாடசாலை மாணவர்களுக்கான போட்டி இரு பிரிவுகளாக, இரண்டு நிலைகளில் நடத்தப்படும்.

★ சகலரும் பங்குபற்றும் மற்றொரு பொதுப் போட்டி.

ஒவ்வொரு பிரிவிலும்,

முதலாம் பரிசு: தங்கப் பதக்கம்
இரண்டாம் பரிசு: ரூ. 1,000-00
மூன்றாம் பரிசு: ரூ. 500-00

மற்றும் ஆறுதல் பரிசுகள்

கொத்தணி மட்டத்தில் முதலாம் இடம் பெறும் மாணவர்களுக்குப் பெறுமதியான நூல்கள் பரிசாக வழங்கப்படும்.

பரிசு பெறுவோர் அனைவருக்கும் சான்றிதம் வழங்கப்படும்.

### (1) பாடசாலை மாணவர்களுக்கான போட்டி விதிகள்:

அ. 9ஆம், 10ஆம், 11ஆம், ஆண்டு மாணவருக்கு ஒரு பிரிவாகவும், 12ஆம், 13ஆம் ஆண்டு மாணவருக்கு மற்றொரு பிரிவாகவும் போட்டி நடத்தப்படும்.

முதலாவது நிலை

ஆ. கோட்டக் கல்வி அதிகாரிகளால் கொத்தணி மட்டத்தில் பூர்வாங்கத் தேர்வு நடத்தப்படும்.

இ. ஒவ்வொரு கொத்தணியிலும் இரு பிரிவுகளிலும் தனித்தனியாக மூன்று மாணவர்கள் திறமை அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர்.

இரண்டாவது நிலை

ஈ. தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு குறிப்பிட்ட ஒரு தினத்தில் இறுதிப் பரீட்சை நடத்தப்படும். இப் பரீட்சைக்கு மாணவர்கள் நேரில் தோற்ற வேண்டும்.

உ. பல்கலைக்கழக தமிழ்த்துறைப் பேராசிரியர்/விரிவுரையாளர் கட்டுரைகளை மதிப்பீடு செய்து பரிசுக்குரிய கட்டுரைகளைத் தேர்ந்தெடுப்பர். அவர்களின் தீர்ப்பே இறுதியானது

### (2) பொதுப்போட்டி

கீழ்க்காணும் தலைப்புக்களில் ஏதேனும் ஒன்றைப் பற்றி கட்டுரை எழுதி அனுப்பவேண்டும்.

தலைப்புகள்:

1. தமிழர் பிரதேச மூலவளங்கள்
2. ஈழத் தமிழரின் பண்பாட்டுக் கோலங்கள்
3. இன்றைய ஈழத்துத் தமிழ்க் கவிதை
4. பொருத்தமான தொழில் நுட்பம்
5. நெருக்கடி நிலையும் வெகுசனத் தொடர்பு சாதனங்களும்

### போட்டி விதிகள்:

(i) கட்டுரை 800 சொற்களுக்கு மேற்படாமல் இருக்கவேண்டும்.
(ii) ஒருவர் ஒரு கட்டுரை மட்டுமே அனுப்பலாம்.
(iii) கட்டுரையில் எழுதுபவரின் பெயர், முகவரி எழுதப்படல் ஆகாது.
(iv) உதயனில் பிரசுரமாகும் கூப்பனை நிரப்பி கட்டுரையுடன் இணைத்து அனுப்பவேண்டும்.
(v) கடித உறையின் இடது மேல் மூலையில் "கட்டுரைப் போட்டி" எனத் தவறாது குறிப்பிடவும்.
(vi) கட்டுரைகள் 15-05-1992 க்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படவேண்டும்.
(vii) கட்டுரைகளை மூடிய கடித உறையில் உதயன் காரியாலயத்தில் நேரிலும் ஒப்படைக்கலாம். தபாலில் அனுப்புவோர், ஆசிரியர், உதயன் பணிமனை, 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பவேண்டும்.
(viii) போட்டிக்கு அனுப்பப்படும் கட்டுரைகளைப் பிரசுரிக்கும் உரிமை உதயனுக்கே உரியது. கட்டுரைகள் திருப்பி அனுப்பப்படமாட்டா.
(ix) யாழ். பல்கலைக்கழக நடுவர் குழு பரிசுக்குரிய கட்டுரைகளைத் தேர்ந்தெடுக்கும். நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானது.

குறிப்பு:- போட்டிகள் தொடர்பாக எவ்விதக் கடிதத் தொடர்பும் வைத்துக் கொள்ளப்படமாட்டாது.

### உதயன் கட்டுரைப் போட்டி - 1992

கட்டுரைத் தலைப்பு: ..........................

முழுப் பெயர்: ..........................

முகவரி: ..........................

..........................

இக் கட்டுரை எனது சொந்தப் படைப்பு என்பதை இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

..........................
கையொப்பம்

திகதி: ..........................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

# தாய் விருட்சம் அன்னை பூபதி

அன்னை பூபதியின் நான்காவது நினைவு தினம் இன்று ஏப்ரல் 19 ஆம் திகதியாகும். வடக்கிலும் கிழக்கிலும் — தமிழ்ப் பிரதேசம் எங்கும் — கடந்த ஒரு மாதமாக அன்னைக்கு அஞ்சலி செலுத்தும் வைபவங்களும்; நினைவு நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

நினைவுக் கூட்டங்களில் அன்னையின் தியாகம் குறித்தும் அவரது மன உறுதி மற்றும் பண்புகள் குறித்தும் பலரும் உரையாற்றினார்கள். அன்னையின் சிறப்புக் குறித்து மக்கள் மத்தியில் பல வடிவங்களிலும் கருத்துக்கள் பதிக்கப்பட்டன; பரப்பப்பட்டன.

அன்னை பூபதி ஈழத்தமிழர்களின் சுதந்திரப் போராட்ட வரலாற்றில் நிரந்தரமாகப் பதிவாகிவிட்டவர். அவரது தியாகம் மன உறுதி, சமூக நோக்கு, யதார்த்த பார்வை என்பன ஈழத் தமிழ் மக்கள் எல்லோருக்கும் இருக்க வேண்டியவை. கடந்த ஒரு மாதமாக நடந்த நினைவுக் கூட்டங்களும், உண்ணாவிரத நிகழ்வுகளும் மேற் சொன்ன பண்புகளை மக்கள் மனதில் பதித்திருந்தால் மட்டுமே அவை வெற்றி அளித்ததாகக் கருத முடியும்.

தமிழர்களின் உரிமைப் போராட்டம் என்பது இளைஞர்கள் ஆயுதம் ஏந்தி நடத்தும் யுத்தத்துடன் மட்டும் நிற்கவில்லை. இராணுவத் தாக்குதல்களுடன் மட்டும் மட்டுப்படுத்தப்படவில்லை. மக்களின் மன உறுதியால் நடக்கும் போராட்டங்களும் உரிமைப் போராட்டத்தில் அடங்கும் என்பதை உலகத்துக்கு எடுத்துக் காட்டியவர் அன்னை பூபதி.

ஆயுதப் போராட்டத்தை மட்டுமல்ல. சாத்வீகப் போராட்டத்தையும் நடத்த வல்ல மனப்பக்குவம் தமிழரிடம் உண்டு என்பதை தியாகி திலீபனைத் தொடர்ந்து அன்னை பூபதியும் எடுத்துக் காட்டினார்.

ஆக்கிரமிப்போ, அடக்குமுறையோ, அவை எந்த வடிவத்தில் வந்தாலும், எங்கிருந்து வந்தாலும்— உள்நாட்டிலிருந்து வந்தாலும் சரி வெளிநாட்டில் இருந்து வந்தாலும் சரி— அவற்றை எதிர்த்து வெற்றி கண்டு சுதந்திரம் காண வேண்டும் என்ற தமிழர்களின் உணர்வை மழுங்கடிக்க முடியாது என்ற செய்தியையும் அன்னை பூபதி சம்பந்தப்பட்ட எல்லோருக்கும், முழு உலகத்துக்கும் எடுத்துச் சொன்னார்.

விடுதலைக்காக, சுதந்திரத்துக்காக, உரிமைகளுக்காகப் போராடுவதில். தியாகஞ் செய்வதில் ஈழத் தமிழ்ப் பெண்கள் ஆண்களுக்கு எவ்விதத்திலும் சளைத்தவர்கள் அல்லர் என்பதையும் அவர் எடுத்துச் சொன்னார். ஒரு சாதாரண தமிழ்க் குடும்பப் பெண் அரசியல் உரிமைக்காகப் போராடத் தயங்கமாட்டார் என்ற பெண் எழுச்சி வேகத்தையும் அவர் புகட்டினார்.

இளைஞர்கள் போராட, பெரியவர்கள் பார்வையாளர்களாக ஒதுங்கி நிற்க முடியாது என்று ஈழத் தமிழ் மக்களுக்கு அவர் அறிவுறுத்தினார்.

அன்னையின் உண்ணாவிரதம் தனது சுயரூபத்தை வெளியே காட்டிவிடும் என்பதால் அதனை நிறுத்துவதற்கு இந்தியா எத்தனையோ முயற்சிகளை மேற் கொண்டது. ஆனால் அன்னை பூபதி மன உறுதி தளரவில்லை. மரணத்தை அரவணைத்தாலும் இலட்சியத்தைக் கைவிடும் வழக்கம் தமிழர்களிடம் இல்லை என்பதை அவர் இந்தியாவுக்கு இடித்துரைத்தார்.

ஒட்டு மொத்தமாக அன்னை பூபதி, ஈழத் தமிழர்களின் சுதந்திர உணர்வினதும், விடுதலை வேட்கையினதும் வடிவமாவார். தமிழ் மக்களின் விடிவுக்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்ட தலைமைப் பெண் போராளி அவர். பூத்துப் பொலியவிருக்கும் ஈழத்தமிழர் சுதந்திர மலரின் தாய் விருட்சம் என்றும் அவரைப் போற்றலாம்.

# இந்த மண்ணுக்கும் மக்களுக்குமாக உருகிய மெழுகுவர்த்தி அன்னை பூபதி

''மட்டு நகரில் மாமாங்க வீதியில்
மாதரசி கிடந்தாள் — ஒரு
மாதம் கிடந்த பின் மக்களுக்காகவே
மண்ணை அவள் துறந்தாள்.''

உலகை ஒருகணம் உலுப்பிய புயலின் பெயர் இது. எம்மை ஆக்கிரமித்த அந்நியர்களையே அதிர வைத்த பூகம்பத்தின் பெயர் இது. தமிழீழ மக்களின் விடுதலை உணர்வின் தாரக மந்திரம் இது. நேற்றாகி, இன்றாகி, நாளை யாகும் காலச்சூழலில் இவளின் காலடிச்சுவடுகள் (மறைந்துவிடாது) நிலைத்து நிற்கும்.

இந்திய ஆக்கிரமிப்பாளர்கள் எம் அன்னை பூமியை அள்ளி விழுங்கிட நின்ற அந்த நாட்களை எண்ணிப் பாருங்கள்.

எங்கள் தாய் மண் மேலாதிக்க வாதிகளின் கொடூர நெருப்பில் கொதித்துக் கொண்டிருந்த காலத்தை நினைத்துப் பாருங்கள். அந்த நினைவுகள் இன்றும் கூட நெஞ்சுகளில் நெருப்பு மூட்டும் இந்த நேரத்தில் தான் பூபதி அம்மா போராடினார்.

15 - 3 - 1988 அன்று மட்டு நகரில் மாமாங்க வீதியில் குருந்த மர நிழலில் மேடையிட்டு உண்ணா நோன்பேற்றார்.

சண்டையை நிறுத்து! புலிகளோடு பேசு!! ஏற்க கூடிய நிபந்தனைகளைத் தான் அம்மா இந்திய அரசுக்குப் போட்டார். ஆதிக்கவாதிகள் அம்மாவின் நிபந்தனைகளை அலட்சியம் செய்தனர். பயமுறுத்திப் பணிய வைக்கப் பார்த்தனர். நெருக்கு வாரத்தைக் கொடுத்துப் போராட்டத்தை நிறுத்தி விட முயன்றனர். புயலுக்குத் திரை போட்டுப் பார்த்தார்கள். காட்டுத் தீயைக் கைகளால் மூடப்பார்த்தார்கள்.

தோற்றுப் போனது இந்திய அரசு. முப்பது நாட்கள் இந்த மண்ணுக்காகவும், மக்களுக்காகவும் அந்த மெழுகுவர்த்தி உருகியது.

19-4-1988 அன்னை பூபதி தமிழீழத்தின் மொத்தமான குரலாக பாரத அரசுக்குப் பாடமொன்றைச் சொல்லி விட்டு தன் மூச்சை நிறுத்திக் கொண்டார். அந்நியர்கள் இந்த மண்ணை ஆக்கிரமிக்க வந்தால் இந்த மண் அடங்கிப் போகாது. பணிந்து போய்ப் பார்த்துக் கொண்டிருக்காது. இந்த மண் போராடும் என்ற பாடத்தைப் புகட்டி விட்டு அந்தப் புகழுடம்பு பேச்சிழந்து போனது. அன்னை பூபதி தியாகத்தின் தோற்றப்பாடானாள்.

அன்னை பூபதி ஒரு தனி மனித வடிவமல்ல. எங்கள் எல்லோரினதும் ஒட்டு மொத்தமான கருத்து வடிவம். விஸ்தரிப்பு வாதமையிருட்டு எம் தயகத்தின் மீது குவிந்திருந்த போது அதைக் கலைக்கவென்று எழுந்த கதிரவன் அவருக்கு நாங்கள் என்ன கைமாறு செய்வோம்? நன்றியை எதிர்பாராத அந்த நாயகியை நினைவு கொள்ளுவோம்.

அன்னை பூபதி அம்மாவின் நினைவு நாட்களைக் கொண்டாடுவது நன்றிக் கடனுக்காக அல்ல. அந்த நாட்களை நினைவு கூர்ந்து அடுத்த நாட்களைச் சமூகப் பணிக்கான போராட்டத்தை முன்னெடுப்பதற்காகவே.

(நன்றி : விழிப்பு)

## அன்னை பூபதித் தாயே!

உன்னை எமக்கே உவந்தளித்தாயே
அன்னை பூபதி அம்மா ...... ...!

அம்மா! அம்மா! என்றே நாங்கள்
என்றும் அஞ்சலி செய்ய
இம்மா நிலத்தில் ஈழப்பெண்களின்
இமயமாகினாய் தாயே!

இமய வரம்பன் அன்று தன் வில்லை
இருத்தினான் இதுவரலாறு
இமயத்தளவு உன் தியாகம் என்று
இன்று இதோ கூறும் இவ்விழாவே!

விழாவே எங்கள் ஈழம் முழுவதும்
விழாதே எம் தமிழீழம்
அழாதே மகனே என்று சொன்னாயே
அன்னை பூபதித் தாயே!

கொடுக்க வாங்கும் பொருளா ஈழம்
கொடுப்போம் உயிரையும் தாளும் — ஈழம்
எடுப்போம் விரைவில் அன்னை பூபதிக்கு
இதுவே அஞ்சலி இளைஞா!

— செந்திவு ஞானராஜ்

# எமது மண்ணில் ஆடவும், பாடவும் எதிரியின் அனுமதி வேண்டியதில்லை

## விருது வழங்கும் வைபவத்தில் புதுவை இரத்தினதுரை

யாழ்ப்பாணம், ஏப். 19

இந்த மண்ணில் ஆடுவதற்கும், பாடுவதற்கும் எதிரியின் அனுமதியைப் பெறவேண்டியதில்லை என்பதை அவன் செவிகளுக்கு எடுத்துச் சொல்லுவனவாகவே எமது கலை நிகழ்ச்சிகள் அமைகின்றன. அவை களியாட்டங்களோ, கொண்டாட்டங்களோ அல்ல.

'சந்தனக்காடு' நாடக கலைஞர்களைப் பாராட்டி விருது வழங்கும் வைபவம் கடந்த வெள்ளிக்கிழமை யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெற்றது அந்த வைபவத்துக்குத் தலைமை வகித்து உரையாற்றுகையில் கவிஞர் புதுவை இரத்தினதுரை இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் அங்கு பேசியதாவது;

அச்சமில்லாத, பிச்சையில்லாத ஒரு தேசத்தை அமைக்க நடக்கும் போராட்டத்துடன் தம்மை அணிவகுத்துக் கொண்ட கலைஞர்களை நாம் வாழ்த்தி வரவேற்கிறோம் — என்றார்.

வைபவத்தில் சந்தனக்காடு நாடகம் குறித்து கருத்துரையை கலைப்பேராசிரியர் பொன்னுத்துரை வழங்கினார்.

சந்தனக்காடு நாடகத்தை உருவாக்கிய கலைஞர்களுக்கான விருதுகளை திரு. யோகரட்ணம் யோகியும், மகளிர் படைப் பிரிவின் சிறப்புத் தளபதி செல்வி ஜெயந்தியும் வழங்கினர். [த-5]

# ஆசிரியர் சிலரின் போக்கால் மாணவர்களின் கல்வி பாதிப்பு

## நினைவு விழாக் கூட்டத்தில் உரை

வடமராட்சி ஏப். 19

தமிழ் ஆசிரியர்கள் பலர் தமது தாயக மண்ணை மறந்து தற்போது கொழும்பில் கடமையாற்றுகிறார்கள்: தமிழ் மாணவர்களின் கல்வி நிலை மோசமடைய இவர்களே காரணம் ஆவர்.

புலோலி மேற்கு சதாவதானி கதிரவேற்பிள்ளையின் 85 ஆவது ஆண்டு நினைவு விழா நிலையத் தலைவர் அ. துரைசிங்கம் தலைமையில் நடைபெற்றபோது முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். டிவகலாலா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் பேசியதாவது:-

இந்த மாவட்டத்தில் பல சிறிய கிராமங்களை அனுகிப் பார்த்த போது, 5 வயதுக்கு உட்பட்ட இரண்டு இலட்சம் சிறுவர்கள் கல்வி அறிவு அற்ற நிலையில் இருக்கின்றார்கள் என்பது தெரிய வந்தது.

அத்துடன் உணவு, உடை, கல்விவசதி. சுகாதார வசதிகள் எதுவுமற்ற நிலையில் அவர்கள் வாழுகிறார்கள் இப்படியான நிலையில் ஆசிரியர்கள் சிலரின் இந்த நடவடிக்கைகளினால் தமிழ் மாணவர்களின் கல்வி நிலை மேலும் மேலும் மோசமடைந்துள்ளது மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு கல்லூரிகளிலும், கல்விக் கூடங்களிலும் சகல வசதிகளும் இருக்க வேண்டியது அவசியம் இந்த மாவட்டத்தில் இரண்டு வீதமான மாணவர்கள் படிப்பறிவற்றவர்களாக இருந்து வருகிறார்கள் .இப்படி அவர் கூறினார்.

வைபவத்தில் மற்றும் பலரும் உரை நிகழ்த்தினார்கள்.

வெற்றி பெற்ற மாணவர்களுக்கு திருமதி சிவமலர் டிவகலாலா பரிசுகளை வழங்கினார். (இ-165)

## யாழ் பல்கலைக்கழக

# வெற்றிடங்களை நிரப்ப ஆணைக்குழு அனுமதி

யாழ்ப்பாணம், ஏப் 19

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நிலவும் சாதாரண தொழிலாளர்களின் வெற்றிடங்களுக்கு இனவிகிதாசார அடிப்படையில் அன்றி நியமனங்களை வழங்க பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு அனுமதித்துள்ளது.

எழுதுனர், தொழில் நுட்பவியலாளர், தொழிலாளர்கள் போன்ற பதவிகளுக்கு இனவிகிதாசார அடிப்படையிலேயே நியமனங்கள் வழங்கப்பட வேண்டும் என்றும் —

இதனை நடைமுறைப்படுத்த உதவு முகமாக புதிய நியமனங்கள் எதையும் செய்ய வேண்டாம் என்றும் —

பல்கலைக்கழக நிர்வாகத்துக்கு முன்னர் பணிக்கப்பட்டிருந்தது. [த-3]

# முதல் தொகுதி எழுதுவினைஞர்களுக்கு மாகாண சபையின் கீழ் நியமனம்

யாழ். மாவட்ட அரச அலுவலகங்களில் உள்ள எழுதுவினைஞர் வெற்றிடங்களை நிரப்புவதற்கென தெரிவு செய்யப்பட்ட முதற்தொகுதியினர் மாகாண அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களில் நியமிக்கப்படுவர்.

முதற் தொகுதியாக 804 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்; இவர்களுக்கே இந் நியமனங்கள் வழங்கப்பட உள்ளன.

இதேவேளை —

யாழ். மாவட்டத்தில் வடக்குக் கிழக்கு மாகாணசபைக்கு உட்பட்ட அரச திணைக்களங்களில் மொத்தம் 245 எழுதுநர் பதவிகள் வெற்றிடங்களாக உள்ளன.

இது தொடர்பான விவரத்தை யாழ். அரச அதிபர் வடக்கு - கிழக்கு மாகாண அமைச்சுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

அத்துடன் மத்திய அரசின் கீழ்வரும் அலுவலகங்களின் வெற்றிடங்கள் பற்றிய தகவலும் விரைவில் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (த-?)

# கரைச்சி நூலகம் புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஏப். 19

கிளிநொச்சிப் பகுதியில் மிகவும் சிறந்த நூலகங்களில் ஒன்றாகக் கருதப்படும் கரைச்சி பிரதேச சபை நூலகம் புனரமைக்கப்பட உள்ளது.

கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. க. பொன்னம்பலம் இதற்கான நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறார்.

# ரஷ்ய சம்மேளனம் ரஷ்யவானது

ரஷ்ய சம்மேளனம் என்ற பெயர் ரஷ்யா என்று மாற்றப்பட்டுள்ளது.

ரஷ்ய நாடாளுமன்றம் இது தொடர்பான முடிவை எடுத்தது.

ரஷ்ய சமஷ்டி சோஷலிசக் குடியரசு என இது முன்னர் அழைக்கப்பட்டது. பின்னர் சோஷலிசக் குடியரசு என்ற சொற்றொடர் கைவிடப்பட்டு, 'ரஷ்ய சம்மேளனம்' என்று அந்த நாடு தனது பெயரை மாற்றியது. இப்போது, வெறும் 'ரஷ்யா' என்று மீண்டும் தனது பெயரை அந்த நாடு மாற்றியுள்ளது. (இ-?)

# அன்னைபூபதி நினைவு போட்டியில் சான்றிதழும், பரிசும் பெறுவோர்

யாழ்ப்பாணம், ஏப். 19

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார் மாவட்டங்களில் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட அன்னை பூபதி நினைவுப் பொது அறிவுப் போட்டியில் யாழ். மாவட்டத்தில் 2.812 மாணவர்களும், கிளிநொச்சி மாவட்டத்தில் 371 மாணவர்களும், வவுனியா மாவட்டத்தில் 181 மாணவர்களும், மன்னார் மாவட்டத்தில் 274 மாணவர்களும் சித்தி அடைந்துள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் சித்தி அடைந்த 2 812 பேரில் 186 பேர் 'அ' பிரிவிலும் 497 பேர் 'ஆ' பிரிவிலும், 2,129 பேர் 'இ' பிரிவிலும் சித்தி அடைந்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் சித்தி அடைந்த 371 பேரில் 14 பேர் 'அ' பிரிவிலும். 34 பேர் 'ஆ' பிரிவிலும், 323 பேர் 'இ' பிரிவிலும் சித்தி அடைந்துள்ளனர்.

வவுனியா மாவட்டத்தில் சித்தி அடைந்த 181 பேரில் 34 பேர் 'அ' பிரிவிலும் 66 பேர் 'ஆ' பிரிவிலும் 81 பேர் 'இ' பிரிவிலும் சித்தி அடைந்துள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் சித்தி அடைந்த 274 பேரில் 42 பேர் 'அ' பிரிவிலும், 38 பேர் 'ஆ' பிரிவிலும் 194 பேர் 'இ' பிரிவிலும் சித்தி அடைந்துள்ளனர்,

அத்துடன் 'அ' பிரிவிலும் திறமைச் சித்தியும் பல மாணவர்களுக்குக் கிடைத்துள்ளது, இத்தகைய மாணவர்களுக்கு விடுதலைப்புலிகள் மாணவர் இயக்கம் சான்றிதழோடு பரிசும் வழங்க உள்ளது.

'அ' பிரிவில் திறமைச் சித்தி பெற்று சான்றிதழும் பரிசும் பெறும் மாணவர்கள் — அவர்களின் பாடசாலைகளின் விவரம் கீழே தரப்பட்டுள்ளது.

### யாழ் மாவட்டம்

**ஆண்டு - 7**

கனகரத்தினம் மதன் [கைதடி விக்னேஸ்வரா வி.], கணேசலிங்கம் மயூரன் [வயாவிளான் ம.வி ] மகேந்திரசிங்கம் ஜெயசுந்தரி [நெல்லியடி மகளிர் கல்லூரி] தில்லைநாதன் ஜெகநாதன் [யாழ் இந்துக்கல்லூரி], பத்மநாதன் சுஜிதா [வேம்படி மகளிர் கல்லூரி], நடராசா நிமலராசா [யாழ். இந்துக் கல்லூரி].

**ஆண்டு - 8**

இராசதுரை ஞானராஜ் [சாவகச்சேரி இந்துக் கல்லூரி]. பரராஜசேகரம் கிருஸ்ணகோபி [வேம்படி மகளிர் கல்லூரி], திருநாவுக்கரசு பாலமுருகன் [சென்ஜோன்ஸ் கல்லூரி]

**ஆண்டு - 9**

இராசலிங்கம் பிரசாந்தன் [ஏழாலை ம. வி.] செங்காதரன் இந்திரமோகன் [தெல்லிப்பழை யூனியன் கல்லூரி] ஜெயவீரசிங்கம் ஜெயந்தி [புற்றளை ம வி ], தேவேந்திரபாலன் [ஸ்கந்தவரோதயாக் கல்லூரி], சோமசுந்தரம் ராஜ்கணிதச் செல்வன் [யாழ். இந்துக் கல்லூரி], துரைராஜா பிரஷாந்தன் யாழ் இந்துக் கல்லூரி]

**ஆண்டு 10**

அல்பேட் டெலிசியா [ஊர்காவற்றுறை புனித மரியாள்] தர்மலிங்கம் ஜெயமாலா (நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி]. பாலசுப்பிரமணியம் ரமேஸ்கண்ணா [இணுவில் சைவமகாஜனா ம.வி.]. செல்வநாயகம் சக்திபன் [யா இந்துக் கல்லூரி].

**ஆண்டு - 11**

தர்மராஜன் வினோதன் [யா. இந்துக்கல்லூரி], நா. நகுலேஸ்வரன் [இளவாலை மெய்கண்டான் ம. வி ], சின்னத்தம்பி செந்தில்குமரன் [சாவகச்சேரி இந்துக்கல்லூரி] சிவப்பிரகாசம் விஜயாலயன் [ஹாட்லிக் கல்லூரி], சிவகுரு கிரிதரன் [ஹாட்லிக் கல்லூரி], அருளையா பவானி [வேம்படி மகளிர் கல்லூரி], சிவசுப்பிரமணியம் குகேந்திரன் (வட்டு. இந்துக் கல்லூரி].

**ஆண்டு - 12/13**

சொக்கலிங்கம் தனஞ்செயன் [யாழ்ப்பாணம் கல்லூரி], சுப்பிரமணியம் சரத்குமார் [மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை], தம்பித்துரை சந்திரகாந்தன் [மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப்பாடசாலை], செல்லத்தம்பி சுதாகரன் (ஹாட்லிக் கல்லூரி], சந்திரலிங்கம் கெங்காதரன் [யாழ். மத்திய கல்லூரி]

### கிளிநொச்சி மாவட்டம்

**ஆண்டு - 7**

செ. வசந்தமலர் [முரசுமோட்டை முருகானந்த வி ]. சற்குருநாதன் சுரேசன் [கிளிநொச்சி ம. வி.], குகதாசன் ஜெயதேவன் (தர்மபுரம் ம வி ], ச. நவனீதகேசி [திருவையாறு அ.த.க.பா.] தியாகராசா கனகேசவன் [கனகாம்பிகைக்குளம் கனிஷ்ட வி.].

**ஆண்டு - 8**

ஜனார்த்தனராஜா ஜனார்த்தனி [புனித திரேசா மகளிர் வி ] குலசேகரம் ஜெயாகரன் [திருவையாறு அ. த. க பா.].

**ஆண்டு - 9**

குமாரசாமி ரமணன் [கண்டாவளை ம வி ]

**ஆண்டு 11**

இராஜகோபால் தபகுமார் [கிளிநொச்சி கனிஷ்ட வி.]

**ஆண்டு - 12/13**

பா. லோகேஸ்வரன் [மல்லாவி ம. வி] இராசேந்திரம் உமாநிதி [புனித திரேசா மகளிர் வி.].

### வவுனியா மாவட்டம்

**ஆண்டு — 7**

வே விஜயராணி [புளியங்குளம்], ஜே. நிரோஜா [பெரியதம்பனை], ப. அருள்வாணி [கணேஸ்வரா].

**ஆண்டு — 8**

த. ஜெயக்குமார் [செட்டிகுளம் ம வி]

**ஆண்டு — 9**

த. கவிதா [சேமமடு(1)], தா. நிரோசினி [புளியங்குளம்], கோ. சசிக்குமார் [நொச்சிமோட்டை]. ப. கலைவாணி [கணேஸ்வரா], ப. கலையரசி [கணேஸ்வரா].

**ஆண்டு — 11**

சு. தவமலர் [ஓமந்தை ம வி ], சி. சுந்தரமூர்த்தி [கனகராயன் குளம்]. ச. தயாபரன் [கனகராயன் குளம்], வி. தயாளன் [கனகராயன் குளம்], ஜெ. ஸ்ரீரெங்கநாதன் [கனகராயன் குளம்],

**ஆண்டு — 12/13**

த. சுகந்தன் [கனகராயன் குளம்]. சி. சிவாஜினி [கனகராயன் குளம்], நா. மஞ்சுளாதேவி [செட்டிகுளம் ம.வி], ம. தயாராஜன் [செட்டிகுளம் ம.வி.], த.கலைமகள் (செட்டிகுளம் ம.வி].

### மன்னார் மாவட்டம்

**ஆண்டு — 7**

நடராசா சிவப்பிரதீபன் [இலக்கடிப்பிட்டி றோ.க], யோ. ஜேக்கப் நெவின்ஸ் [பண்டிவிரிச்சான் அ.த.க பா.].

**ஆண்டு — 8**

உ. அச்சுதநாத் [இலுப்பைக்கடவை அ.த.க பா.],

**ஆண்டு 9**

பவுவினப்பர் மேரிறொக்சி [வேரவில் இந்து த க பா.].

**ஆண்டு — 10**

செ அன்ரன்யூட் செல்வநாத் [மடு/ திறந்த நிவாரண பாடசாலை].

**ஆண்டு - 11**

வேலு இந்திரகலா [கருங்கண்டல் றோ க ].

**ஆண்டு — 12/13**

அ. புறூஸ் ஜேசன்பொன்சேகா [முருங்கன் ம வி], மரியாம்பிள்ளை கோமளா கொலஸ்ரிக்கா [முருங்கன் ம வி] (இ)

# குண்டு நிரப்பிய வாகனங்கள் குறித்து கொழும்பு வாசிகளுக்கு எச்சரிக்கை

கொழும்பு ஏப் 19

ஹில்மன் மின்ட் கார்கள் மற்றும் வெள்ளை டொயோட்டா பஸ்ஸைக் கண்டால் மிகவும் அவதானமாக நடந்து கொள்ளும்படி கொழும்பு வாசிகளுக்கு எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளதாக கொழும்பு தினசரிச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது

இந்த ரக கார் அல்லது பஸ் எந்த நேரத்திலும் வெடித்துச் சிதறலாம் என்றும்-

விடுதலைப் புலிகளால் கொள்வனவு செய்யப்பட்டு மட்டக்களப்பில் வைத்து பெற்றோல் தாங்கிகளில் குண்டுகள் பொருத்தப்பட்ட இவ் வாகனங்கள் கொழும்பில் அல்லது மக்கள் அதிகமாக நடமாடும் பகுதிகளில் வெடித்துச் சிதறும் வகையில் ஓட விடப்பட்டுள்ளதாகவும் அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது

ஹில்மன் மின்ட் 8 ஸ்ரீ வகைகள் மூன்றும் டொயோட்டா கோஸ்டர் ரக பஸ் ஒன்றும் இவ்வாறு குண்டுகள் பொருத்தப்பட்டு வீதியில் ஓடவிடப்பட்டுள்ளனவாம் (க)

# சனசமூக நிலையங்கள் இணைவு

மானிப்பாய், ஆனைக்கோட்டை, நவாலி பிரதேசங்களில் உள்ள பத்தொன்பது சனசமூக நிலையங்கள் இணைந்து, உப சமாசம் ஒன்றை உருவாக்கியுள்ளன

ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலையில் இது தொடர்பாக நடைபெற்ற வைபவத்தில் ஒவ்வொரு சனசமூக நிலையத்தில் இருந்தும் ஒவ்வொரு அங்கத்தவர் தெரிவு செய்யப்பட்டு குழு ஒன்று அமைக்கப்பட்டது [இ-80]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## செல்வி பாறுவதி வல்லிபுரம்

[ஓய்வு பெற்ற ஆசிரியை,
மகாவித்தியாலயம் இராமநாதபுரம்]

புலோலி மேற்கு வத்தனையை பிறப்பிடமாகவும் இல. 328, இராமநாதபுரம் கிளிநொச்சியை இருப்பிடமாகவும் கொண்ட செல்வி பாறுவதி வல்லிபுரம் 17-04-92 அன்று கொழும்பில் காலமாகிவிட்டார். இவர், அமரர் திருமதி அருந்தவநாயகம் சிதம்பரம், [ஓய்வுபெற்ற அதிபர். இராமநாதபுரம்], திரு. வ. ஆறுமுகம் [திக்கம்], திரு. வ. தியாகராசா [திக்கம்] ஆகியோரின் அன்புச் சகோதரியும், திரு பெ. சிதம்பரம், திருமதி ஆ. நல்லம்மா, திருமதி தி. கலைஞானசவுந்தரி அம்மாள் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

ஈமக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
சி. சிவபாலன் [பெறாமகன்]

328, இராமநாதபுரம், கிளிநொச்சி. [20635]

## சிவசுப்பிரமணியம் புஸ்பராணி

அச்செழுவை பிறப்பிடமாகக் கொண்ட சிவசுப்பிரமணியம் புஸ்பராணி 15-4-92 இல் காலமாகிவிட்டார். அன்று நடந்த ஈமக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கு நன்றியையும் மற்றும் அறிந்து கொள்ளாத நண்பர்கள் உறவினர்களுக்கு அறிவித்தலையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

தகவல்;
கணவன்:- சிவசுப்பிரமணியம்
பிள்ளைகள்:-
சிவநேசன், சிவராணி, தாயார்.

'அயோத்தி''
அச்செழு
நீர்வேலி
[20629]

## திருமதி கனகேஸ்வரி பரசிவம்

காரைநகர் வலந்தலையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் மருதடி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகேஸ்வரி பரசிவம் காலமாகிவிட்டார். இவர் காரைநகரைச் சேர்ந்த தில்லையம்பலம் தம்பதிகளின் ஏகபுத்திரியும், பரசிவத்தின் அன்பு மனைவியும், ரஞ்சினி [விரிவுரையாளர் கொழும்பு]. சாமினி [ஆசிரியர் மன்னார்] ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற கனகநாயகம் [பாரிஸ்டர், மலேசியா], காலஞ்சென்ற குலசேகரம் [நீதியரசர், சிங்கப்பூர்] ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை 20 - 4 - 92 திங்கட்கிழமை காலை 10 மணியளவில் யாழ்ப்பாணம் இல 8, மருதடி வீதியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகின்றோம்.

தகவல்:
பரசிவம்
[கணவன்]

இல 8, மருதடி வீதி,
யாழ்ப்பாணம். [20639]

## திருமதி தங்கம்மா சின்னத்துரை

மூளாயைப் பிறப்பிடமாகவும். அராலியில் வாழ்க்கைப்பட்டவரும், இல 232, சேர். பொன். இராமநாதன் வீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கம்மா சின்னத்துரை 18-4 92 காலை காலமாகி விட்டார்.

அன்னார் அராலியைச் சேர்ந்த காலஞ்சென்ற வேலுப்பிள்ளை சின்னத்துரை [சிறைச்சாலை மேற்பார்வையாளர்] அவர்களது அன்பு மனைவியும், சிவராசா, திருமதி சிவதேவி முத்துக்குமாரு, திருமதி சித்திராதேவி சிவலிங்கம். சிவகுமார் [இலங்கை வங்கி, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்], திருமதி இந்திராதேவி விஜயவேல்குமாரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், முத்துக்குமாரு [வியாபாரம்], சிவலிங்கம் [சவூதி அரேபியா], விஜயவேல்குமாரன் [இயக்குநர், மிக் இன்டஸ்றீஸ்], திருமதி வினோஜினி சிவகுமார் ஆகியோரின் அன்பு மாமியாரும் சுப்பிரமணியம் சிவகுரு [Retired Director, Ministry of Industries and Scientific Affairs], சுப்பிரமணியம் நடராஜா [Retired M.L.T., Government Hospital] ஆகியோரின் அன்புச் சகோதரியும், செந்தூரன், ஆரூரன், மேனகா, ஜனகன், திரிஷா, வித்யாங்கி, நிதர்சன், கார்த்திகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று 19 4-92 காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக குடும்ப மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

தகவல்:
ந விஜயவேல்குமாரன்
(மிக இன்டஸ்றீஸ்]

232, சேர் பொன். இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம். [20637]

## ஆ. செல்லையாபிள்ளை

முன்னைநாள் யாழ்ப்பாணம் பிரபல வர்த்தகரும் அரசாங்க ஒப்பந்தகாரரும், காரைநகர் பலகாட்டைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் இல. 93, மானிப்பாய் வீதி இல்லத்தை வசிப்பிடமாகவும் கொண்டவருமான ஆ. செல்லையாபிள்ளை காலமாகிவிட்டார்.

இவர் தங்கமுத்துவின் அன்புக் கணவரும், சிவபாக்கியம். மகேஸ்வரி, கிருஷ்ணவேணி மற்றும் வர்த்தகர்களான சண்முகராஜா, நடேசன், வரதராஜா, சச்சிதானந்தம். மகேந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற ஆ. க. கனகசபாபதி (வர்த்தகர், யாழ்ப்பாணம்], த. சிவப்பிரகாசம் [வர்த்தகர். யாழ்ப்பாணம்], சிவபாதம் [வர்த்தகர், சுன்னாகம்] நாகராஜேஸ்வரி, இரத்தினேஸ்வரி, மேனகா, இந்திராணி ஆகியோரின் மாமனாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று ஞாயிறு பிற்பகல் 2 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்

தகவல்;
பிள்ளைகள்

93, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம். [20640]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன்( பிறைவேட் ) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 19 - 4 - 1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

## உற்சவங்கள்

ஆனைக்கோட்டை சிராம்பிராய் பிள்ளையார் கோவில் உற்சவம் நேற்று சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. இதுவரை காலமும் சித்திரையில் 10 நாட்களுக்கு அலங்காரத் திருவிழா நடைபெறும் இடம் பெற்ற இக்கோவிலில், இவ் முதல் முறையாக கொடியேற்ற வைபவத்துடன் தேர், மற்றும் தீர்த்தத் திருவிழா ஆகியவை இடம் பெறவுள்ளன. (த)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஏப். 19

வண்ணை வடமேற்கு கோவில் முத்து விநாயகர் தேவஸ்தான இராஜ கோபுர மஹா கும்பாபிஷேகம் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும்.

## புலிகளைத்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

படுத்துவது போல, ராஜீவ் கொலைச் சந்தேக நபர்களை தன்னிடம் ஒப்படைக்கும்படி இந்தியா, இலங்கையைக் கேட்குமா?'' என்று செய்தியாளர் ஒருவர் கேட்டார்.

அதற்குப் பதிலளித்த பிரதமர் ராவ் '' இந்தப் பிரச்சினை குறித்து பின்னர் படிப்படியாக நடவடிக்கை எடுக்கப்படும்'' என்றார். (உ-10)


BITSMANS
கல்வி நிறுவனம்
மானிப்பாய்.
A/L 94
★ பௌதிகம் ★
ஆசிரியர்
திரு. விமல்ராஜ் (B. Eng)
ஆரம்பம்: 19 — 4 — 92
ஞாயிறு 10. 00 a. m.
(C / 1930)



புதிய உயர் கல்லூரி
(New College of High Studies)
O/L
DAY CLASSES
ஆரம்பம்:
28-04-1992
[8 மணி]
O/L
(Sat. — Sun)
புதிய பிரிவு:
ஆரம்பம்:
25-04-1992
[காலை 6 மணி]
[சி-1895]



SUBRA
சித்தன்கேணி.
விசேட ஆங்கில வகுப்பு
ஆசிரியர், எழுதுவினைஞர், ஏனையோருக்குமான அனுமதி பெற்ற வகுப்புகள்
N. C. E.
Follow me
ESOL
ஆகிய வகுப்புகள் ஆரம்பமாகின்றன
ஆரம்பம்:
20-04-1992
திங்கள்: 4 மணி
ஆசிரியர்:
திரு. தெய்வதவபாலன்
92 A/L வினா-விடை வகுப்புகள்
94 A/L கணித, விஞ்ஞான வகுப்புகள்
O/L பகல் நேர வகுப்புகள் ஆரம்பமாகின்றன.
ஆரம்பம்:
21-04-1992
[4673]


## தமிழர் போராட்டத்தின்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ரணக் குடும்பப் பெண்ணாக, தனி மனுசியாக அன்னை பூபதி பாரிய அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் ஆரம்பித்த உண்ணாவிரதப் போராட்டமானது இந்தியாவை உலக அரங்கில் தலை குனிய வைத்தது. அவர்களுடைய வேஷத்தை அம்பலப்படுத்தியது. தூங்கிக் கிடந்த தமிழீழ மக்களைத் தட்டி எழுப்பியது. எமது போராட்டத்தின் நியாயத்தினை அனைவருக்கும் புரிய வைத்தது. தமிழீழ விடுதலைப் போராட்டம் புதிய வேகம் பெற்றது.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தைத் தொடர்ந்து எம் மண்ணில் கால் வைத்த இந்தியப் படைகள் தமது சுயரூபத்தை, ஆதிக்கநோக்கை காட்டத் தொடங்கியபோது தமிழீழமே யுத்தகளமானது, ஆயிரக்கணக்கில் தமிழ் மக்கள் சுட்டும், வெட்டியும் ஈவிரக்கமற்றுக் கொன்று குவிக்கப்பட்டனர்.

தமிழீழம் ஒரு மயான பூமியின் நிலையினைப் பெற்று இருளில் மூழ்கியது. கேட்பார் யாருமில்லாதது போல இந்தியப் படைகள் வெறியாட்டம் போட்டுக் கொண்டிருந்த வேளையில் தான் மட்டக்களப்பில் —

19-03-1988 அன்று —

திருமதி பூபதி கணபதிப்பிள்ளை அவர்கள் தமிழ் மக்கள் மீதான அதர்ம யுத்தத்தை உடன் நிறுத்து; விடுதலைப் புலிகளுடன் நிபந்தனை அற்ற பேச்சு வார்த்தையை நடத்து; என்ற இரு கோரிக்கைகளையும் இந்திய அரசிடம் முன் வைத்து தனது 58ஆவது வயதில் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தார்.

மிகவும் நெருக்கடி மிகுந்த கால கட்டத்தில் அன்னையின் போராட்டம் ஆரம்பமானது. தொடர்ந்தது. தமது சுயரூபத்தை மறைத்து சர்வதேச அரங்கில் எமக்கெதிராக பிரச்சாரம் மேற் கொண்டிருந்த இந்திய அரசு, அன்னையின் போராட்டத்தைக் கண்டு அஞ்சியது. உண்ணா விரதத்தைக் குழப்ப சூழ்ச்சிகள் செய்தது. அன்னையின் குடும்பத்திற்கு எச்சரிக்கைகள் அனுப்பப்பட்டன. ஆனாலும் அவற்றை எல்லாம் மீறி அன்னையின் உறுதி இறுதி வரை நிலைத்தே நின்றது.

இறுதியாக 19-04-1988 அன்று தனது கோரிக்கைகள் நிறைவேறாத நிலையிலேயே அன்னை எமது போராட்டத்தின் நியாயத்தை உலகிற்கு உணர்த்தி விட்டு இந்திய ஆக்கிரமிப்பிற்கு எதிராக திரண்ட ஒரு வெகுஜன சக்தியை உருவாக வைத்து விட்டு எம்மைப் பிரிந்தார்.

அன்னை பூபதி தமிழீழப் பெண்ணினத்திற்கு மட்டுமல்லாது உலகப் பெண்ணினத்திற்கே பெருமை சேர்த்தவர். உலகில் இதுவரை எந்தப் பெண்ணுமே செய்திராத தியாகம் அன்னையினுடையது. அன்னை தமிழீழப் பெண்ணினத்தின் எழுச்சி வடிவம். தான் பெற்ற குழந்தைகளுக்கு மட்டும் தாயாக விளங்காது தமிழீழம் முழுமைக்குமே தாயாய் நிறைந்திருப்பவர் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வங்காலையில்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வங்காலை முகாமில் இருந்து ஹெலிகளின் உதவியுடன் மற்றோர் இராணுவ அணியும் சம்பவம் நடந்த இடத்தை நோக்கி முன்னேறி வந்தன.

அந்த அணிகளின் மீதும் விடுதலைப் புலிகள் தாக்குதல் தொடுத்து அவற்றை பின்வாங்கச் செய்தனர்;

மகளிர் படைப் பிரிவினரும் இணைந்து நடத்திய இந்தத் திரமிகு தாக்குதல் சம்பவத்தின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் இரு போராளிகள் வீரமரணமடைந்தனர். [உ-5]

## இன்று

யாழ்ப்பாணம், ஏப். 19

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த சகல சாரணர்கள், திரிசாரணர்கள் ஆகியோரை இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5 30 மணிக்கு சீருடையில் யாழ். இந்துக் கல்லூரியில் கூடுமாறு யாழ். மாவட்ட சாரணர்களைச் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது

★ ★ ★

குருநகர் புனிதவளன் விளையாட்டுக் கழகத்தின் 44 ஆவது ஆண்டு நிறைவுக் கொண்டாட்டங்கள் இன்று நடைபெறுகின்றன. கழகத் தலைவர் திரு. சி. தார்ஸிபஸ் தலைமையில் நடைபெறும் இக்கொண்டாட்டங்களில் சிறுவர்களுக்கான விளையாட்டுக்கள் அங்கத்தவர் ஒன்றுகூடல் ஆகிய நிகழ்ச்சிகளும் இடம்பெறும். [உ-51]

★ ★ ★

கொழும்புத்துறை கிழக்கு வசந்தபுரம் விண்மீன் சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் நிலைய முன்றலில் இன்று மாலை 6 மணி தொடக்கம் உயிர்த்தெழுந்த ஞாயிறு நிகழ்ச்சிகள் நடைபெறும். [உ-30]

## தெரிவுக் குழுவின்....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

யாழ்ப்பாணம் சென்ற 29 பேர் கொண்ட பௌத்த குருமார் தூதுக் குழுவுக்கு இவர் தலைமை வகித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. வண. அஸ்ஸாஜி தேரர் தமிழில் சரளமாகப் பேச வல்லவராவார். இவர் பாலத்துறை (கிராண்ட்பாஸ்) இசிப்பத்தானராமய விகாரையின் விகாராதிபதியாவார்.

நாளை திங்கட்கிழமை யாழ்ப்பாணம் சென்றடைவர் என எதிர்பார்க்கப்படும் பௌத்த பிக்குகள் அங்கு ஐந்து நாட்கள் தங்கியிருப்பர்.

கொழும்பிலிருந்து தரை மார்க்கமாக அனுராதபுரம் சென்று, அங்கு புனித அரசமரத்தில் மதச் சடங்குகளை நடத்திவிட்டு, பின்னர் தூதுக் குழுவினர் அங்கிருந்து விமான மூலம் பலாலி விமானதளத்தைச் சென்றடைவர் என்றும் —

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவினர் பலாலியிலிருந்து அவர்களை யாழ். நகருக்கு அழைத்துச் செல்லவும் ஏற்பாடாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் அவர்களால் தடுத்து வைக்கப்பட்டுள்ள 40 படையினரையும் விடுதலை செய்யுமாறு தாம் புலிகளிடம் கேட்க இருப்பதாக வண. அஸ்ஸாஜி தேரோ தெரிவித்தார். (அ-10-5)

## காரிருளில்....

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

களை அச்சுறுத்திப் போயின. பூரணை மூன்றாள் நாள் முன் இருளில் வானம் கார் படிந்திருந்த வேளை பொம்மர்கள் வந்தன.

நீண்ட நாட்களின் பின் இரவு வேளை வந்த பொம்மர்களின் அச்சுறுத்தலால் நகர மக்கள் சிறிது நேரம் அல்லோல கல்லோலப்பட்டனர். இரவில் நோக்கமில்லாமல் பொம்மர்கள் வந்திருக்க மாட்டா என்று பலரும் பேசிக் கொண்டனர். [அ-5]

## சமாதானக் கதவு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வாறு தெரிவித்திருக்கிறார்.

அன்னை பூபதியின் நான்காம் ஆண்டு நினைவு தினம் இன்றாகும். அதனை ஒட்டி தலைவர் திரு. வே. பிரபாகரன் வெளியிட்ட அறிக்கை ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது;-

மனித வரலாற்றில் என்றுமே நிகழ்ந்திராத, எவருமே சாதித்திராத, மகத்தான மனித அர்ப்பணிப்புகளைக் கொண்டதாக எமது விடுதலைப் போராட்டம் புகழீட்டி நிற்கிறது. இந்த அற்புதமான தியாக வரலாற்றில் அன்னை பூபதி ஓர் உன்னதமான, தனித்துவமான இடத்தைப் பெற்றுள்ளார்.

சத்தியத்திற்காக சாகத் துணிந்துவிட்டால் ஒரு சாதாரண மனிதப் பிறவியும் சரித்திரத்தைப் படைக்க முடியும். இதற்கு அன்னை பூபதியின் தியாகம் ஒரு சிறப்பான எடுத்துக்காட்டு. சத்தியத்திற்காக, தர்மத்திற்காக அவர் சாவை அரவணைத்துக் கொண்டார். இந்த ஒப்பற்ற ஈகையால் ஒரு சாதாரண தாயான அவர் அசாதாரண சாதனையைப் புரிந்து தேசியத் தாய் என்ற அந்தஸ்தற்கு உயர்ந்தார்.

அறப் போரிலும் சரி, ஆயுதப் போரிலும் சரி எமது விடுதலைப் போர் உலக சாதனைகளைப் படைத்துவருகிறது. மனித ஈகையின் சிகரத்தை எட்டியிருக்கிறது.

### திலீபனின் புரட்சி

அகிம்சையின் அறத்தையும் ஆன்மீக தர்மத்தையும் போதித்துவந்த பாரத நாடு, ஆக்கிரமிப்புப் பூதமாக, அன்றொரு நாள், எம் மண்மீது கால் மிதித்தது. அப்பொழுது, எமது போராளி ஒருவன் பாரதத்தின் ஆன்மீக மரபில் அறப்போரைத் தொடுத்தான். காந்தி அடிகளின் சாத்வீக தத்துவத்தை பாரத நாட்டிற்கு புகட்டிக்காட்ட விரும்பினான். ஆன்மீக உறுதிப்பாட்டின் அதியுயர்ந்த அர்ப்பணிப்பாக அவனது உயிர்த் தியாகம் அமைந்தது. திலீபனின் தியாகம் காந்தியின் அறக்கோட்பாட்டிற்கு ஒரு மகோன்னதமான செயற்பாட்டு வடிவம் கொடுத்தது. பாரதத்தில் மடிந்துபோன ஆன்மீகம் தமிழீழத்தில் புதுப் பொலிவுடன் புரட்சிவடிவத்தில் மறு பிறப்பு எடுத்தது.

திலீபனின் தியாகம் இந்திய மாயையைக் கலைத்தது; தமிழீழ தேசிய உணர்வை தட்டி எழுப்பியது. இந்த தேசிய எழுச்சியின் வெகுசன வடிவமாக அன்னையின் அறப்போர் அமைந்தது.

அந்த வயோதிபத் தாய் நீதியின் நெருப்பில் தன்னை எரித்துக்கொண்டாள். அந்தத் தீ, என்றும் அணையாத சுதந்திர தீபமாக, எம்முள் இன்றும் எரிந்துகொண்டிருக்கிறது.

தேசிய விடுதலையை முன்னெடுக்கும் புரட்சிகர இயக்கம் என்ற ரீதியில் புலிகள் இயக்கமானது காலத்திற்கு காலம், வரலாற்றுத் தேவைகளுக்கேற்ப புதிய போராட்ட உத்திகளை அறிமுகம் செய்திருக்கிறது. ஆத்துடன் அந்தப் போராட்ட முறைக்கு முன்னுதாரணமாகவும், இலக்கணமாகவும் திகழ்ந்து அற்புதமான அர்ப்பணிப்புகளையும் செய்துள்ளது. இன்று எமது விடுதலைப்போராட்டம் ஒடுக்கப்படும் உலகிற்கு ஒரு முன்மாதிரியாக, வழிகாட்டியாக திகழ்வதற்கும் இந்த தனித்துவமான பண்புகள் தான் காரணம்.

### சாமதானத்திலும் நேர்மை

போர்முறையில் நாம் காட்டும் தீவிர அக்கறை போன்று தான் சமாதான வழி முறையிலும் நேர்மையான அணுகுமுறையைக் கடைப்பிடித்தோம். பல தடவைகள் போர்நிறுத்தம் செய்து சமாதானப் பேச்சுக்களில் பங்கு கொண்டோம். இன்றும் சமாதானத்தின் கதவுகளை அகலத் திறந்துவிட்டிருக்கிறோம்.

எனினும் தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினைக்கு சமாதான வழியில் தீர்வு காண்பதற்கு சிங்களப் பேரினவாதிகள் தயாராக இல்லை. மனித தர்மத்தின் அடிப்படையில் தமிழருக்கு நீதியும் நியாயமும் வழங்க சிங்கள தேசம் தயாராக இல்லை. ஆயுத பலம் மூலம் இராணுவ மேலாதிக்கத்தை நிலைநாட்ட வேண்டும்; தமிழினத்தை துப்பாக்கி முனையில் பணியவைக்க வேண்டும்; தமிழரின் தாய் மண்ணை பலவந்தமாக பறித்தெடுக்கவேண்டும் — என்ற பழைய அடக்குமுறைப் பாதையை சிங்கள ஆளும் வர்க்கம் கைவிட்டதாகத் தெரியவில்லை.

தமிழரின் பிரச்சினை குறித்து சிங்கள அரசியல் உலகில் எவ்வித அடிப்படையான மனமாற்றமும் நிகழ்ந்ததாகத் தெரியவில்லை. இரத்தமும் கண்ணீரும் தோய்ந்த ஒரு நீண்ட முடிவில்லாத சோக வரலாற்றைத் தழுவிநிற்கும் எமது மக்களின் துயரநிலைபற்றி சிங்கள இனவாதிகள் கவலை கொண்டதாகத் தெரியவில்லை. முப்பதினாயிரம் அப்பாவித் தமிழரின் பிணக்குவியல்கள் மீது மேடையமைத்து சிங்களப் பேரினவாதம் மிகவும் அதர்மமான, அநாகரிகமான அரசியலை நடத்திவருகிறது.

### சமாதான விரோதிகள் அல்லர் நாம்

நாம் சமாதான மார்க்கத்திற்கு விரோதிகள் அல்லர். ஆனால் சமாதான அணுகுமுறை என்பது எமது மக்களின் உரிமைகளையும், நலன்களையும் விட்டுக் கொடுக்கும் விவகாரம் அல்ல. எனினும் எமது மக்களின் உரிமையை வென்றெடுக்க முடியுமானால், எமது மக்களின் நலன்களை பேணிப் பாதுகாக்க முடியுமானால், சமாதான வழிமுறையை நாம் தழுவிக்கொள்ளத் தயார். ஆனால் எமது எதிரியோ சமாதான அணுகுமுறையை ஓர் அரசியல்பொறியாக கையாள விரும்புகிறான். எனவே, எதிரியின் தந்திரோபாயத்தில் நாம் மிகவும் விழிப்பாக இருக்கவேண்டும்.

இன்று நாம் மிகவும் நெருக்கடியான வரலாற்றுத் திருப்புமுனையை சந்தித்து நிற்கிறோம். எதிரி எம்மீது படை கொண்டு தாக்கலாம் ;புதிய ஆக்கிரமிப்பு யுத்தத்தைத் தொடரலாம்; எது நிகழ்ந்தாலும், எதற்கும் அஞ்சாத துணிவும் உறுதியும் எம்மிடமுள்ளவரை எந்தச் சக்தியாலும் எம்மை வென்றுவிட முடியாது. ஒரு சத்திய யுத்தத்தில் தர்மமே வெற்றிகொள்ளும் என்பது வரலாற்று உண்மை.

இன்றைய, இப் புனித நாளில், அந்நிய ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராடி உயிர்நீத்த எமது தியாகிகளையும், மக்களையும் நினைவில் நிறுத்தி, அவர்களுக்கு வீர வணக்கம் செலுத்துவோமாக.—என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ-5]


விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
கணக்கியல் S. K. பிரபாகரன்
ஆரம்பம்: 19 - 04 - 1992
சனி, ஞாயிறு 2 மணி
92 வினா - விடை வகுப்பு 2 - 3
93 புதிய பிரிவு 3 - 4
94 புதிய பிரிவு 4 - 5
அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.
[சி-1883]


# மரண அறிவித்தல்

## T. S. கணேந்திரன்

(Director - Maharajahs)

சம்பந்தர் கணேந்திரன் காலமானார். இவர் தெல்லிப்பளையைச் சேர்ந்த காலஞ்சென்ற சம்பந்தர் தம்பதிகளின் மூத்த மகனும், செல்லப்பா தம்பதிகளின் மருமகனும், தட்சாயினி (Babachy) யின் அருமைக் கணவரும், பிரசாந்தி (சஞ்சு), சிவசாந்தி, தண்ணியசாந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும், சுகந்தவின் மாமனாரும், திருமதி செல்லையா, திருமதி சிவஞானசோதி, மகேந்திரன் (Peninsula Glass), பாலேந்திரா (Engineer - C. T. B.), இராஜேந்திரா (U. K) ஆகியோரின் அருமைச் சகோதரரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 15-4-92இல் கொழும்பில் நடைபெற்றன.

தகவல்:
மனைவி

26, வோட் பிளேஸ்,
கொழும்பு - 7. (20636)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org